செய்தி வெளியீடு எண் : 2225 நாள் : 08.12.2022

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்**
**44வது செயலாண்மைக் குழு கூட்டம்**
**மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும்**
**இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்**
**திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 44வது செயலாண்மைக் குழு கூட்டம் (44th Executive Committee Meeting) மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, தலைமைச் செயலகத்தில் 07.12.2022 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இக்குழுவின் உறுப்பினர்களான அரசு தலைமைச் செயலாளர் முனைவர். வெ. இறையன்பு, இ.ஆ.ப, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத்தலைவர்கள் திரு. என். ராமச்சந்திரன், டாக்டர். பொன். அசோக் சிகாமணி மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர். அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப, நிதித்துறை சிறப்பு செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர்,இ.ஆ.ப, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர். எம். சுந்தர் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர், மருத்துவர். கா.ப. கார்த்திகேயன்,இ.ஆ.ப, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் சென்னையில் சர்வதேச தரத்திலான விளையாட்டு நகரம் அமைத்தல், சென்னை, திருச்சி, மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஒலிம்பிக் அகாடமிகள் அமைத்திட இடம் தேர்வு, அரசு நிர்வாக அனுமதி, நிதித் தேவை மற்றும் ஒதுக்கீடு தொடர்பான நடவடிக்கைகள், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்க செல்லும் வீரர்–வீராங்கனைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகள், நலிவடைந்த நிலையிலுள்ள தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்–வீராங்கனைகளுக்கான உதவிகள், பல்வேறு அரசுத்துறைகளுடன் ஒருங்கிணைந்து முதலமைச்சர் போட்டிகள் நடத்துவதற்கான வழிமுறைகள், விளையாட்டு பயிற்றுநர்கள் நியமனம் செய்தல், நேரு விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகின்ற மருத்துவ பரிசோதனை மையம் சேவை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் தெரிவிக்கையில்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லா நிலைகளிலும் வளம் பெற்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்ற அடிப்படையில் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். விளையாட்டின் மீது ஆர்வம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்கிடவும், தமிழ்நாடு வீரர்–வீராங்கனைகள் அனைத்து விளையாட்டுகளிலும் சாதனை படைத்திடவும், இளைய சமுதாயத்தினரின் கவனத்தை விளையாட்டின் பால் ஈர்க்கும் வண்ணம் பன்னாட்டு அளவிளான போட்டிகளை நடத்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

விளையாட்டு வீரர்–வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்ற அரசின் திட்டப் பயன்கள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். 44வது செஸ் ஒலிம்பியாட், சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகளை உலகம் வியக்கும் வண்ணம் நடத்தியுள்ள நிலையில் வருகின்ற காலங்களில் பன்னாட்டு அளவிலான போட்டிகளை நடத்த நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

வீரர்–வீராங்கனைகள் தங்களது திறமைகளையும், சாதனைகளையும் வெளிப்படுத்தும் விதமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பல்வேறு நிலைகளில் நடத்துகின்ற விளையாட்டு போட்டிகளை சிறப்பான முறையில் நடத்திட வேண்டும். தேசிய, பன்னாட்டு அளவிலான போட்டிகள் மற்றும் ஒலிம்பிக், பாராஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் மற்றும் வெற்றி பெறுகின்ற தமிழ்நாடு வீரர்–வீராங்கனைகளுக்கு உதவித்தொகைகள், ஊக்கத்தொகைகள் உடனுக்குடன் வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும் – எனக்கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in